செய்திக்குறிப்பு

**கல்வி அமைச்சகம் பாரதீய பாஷா உத்சவ் எனும் பாரத மொழிகள் திருவிழாவைக் கொண்டாட உள்ளது. அதில் தொழில்நுட்பமும் பாரத மொழிகளும் எனும் இரண்டு நாள் உச்சிமாநாட்டை 30 செப்டம்பர் 2023 மற்றும் 1 அக்டோபர் 2023 ஆகிய தேதிகளில் நடத்த உள்ளது.**

செப்டம்பர் 28, 2023 அன்று தொடங்கி 75 நாள்கள் தொடரப்போகிற **பாரதீய பாஷா உத்சவ்** எனும் பாரத மொழிகள் திருவிழாவைக் கல்வி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இதன் ஒரு பகுதியாக **தொழில்நுட்பமும் பாரத மொழிகளும்** எனும் இரண்டு நாள் உச்சிமாநாட்டை செப்டம்பர் 30, 2023 மற்றும் அக்டோபர் 1, 2023 ஆகிய தேதிகளில் நடத்த உள்ளது. பாரதீய பாஷா உத்சவின் ஒரு பகுதியாக மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், புது தில்லியில் உள்ள டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலையில் உள்ள பாபா சாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சர்வதேச மையத்தில் உச்சிமாநாட்டைத் தொடங்கி வைக்கிறார். காஞ்சிபுரத்தில் உள்ள IIIT-DM இன் நிர்வாகக் குழுவின் தலைவரும், Zoho கார்ப்பரேஷன் தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு ஸ்ரீதர் வேம்பு சிறப்புரையாற்றுவார்.

இந்த உச்சிமாநாட்டில் மூன்று கருப்பொருள்சார் அமர்வுகள் இருக்கும். அவை, (i) பாரத **மொழிகளுக்கான (FOR)** தொழில்நுட்பம் (ii) பாரத **மொழிகளில் (IN)** தொழில்நுட்பம், (iii) பாரத **மொழிகள் வாயிலாக (THROUGH)** தொழில்நுட்பம் ஆகியனவாகும். பாரத மொழிகளுக்குத் தொழில்நுட்பத்தைப் பயனபடுத்துவதை இந்தக் கருப்பொருளின் அம்சங்கள் இலக்காகக் கொண்டிருக்கும். இதில் கற்றலை உள்ளடக்கிய கற்பித்தல்; பணிக்கு முந்தைய மற்றும் பணியிடை ஆசிரியர்கள், பாடநூலாசிரியர்கள், தேர்வாளர்கள், வல்லுநர்கள் ஆகியோருக்கான பயிற்சி; தகுமங்களை (கிரெடிட்கள்) வழங்குவதன் வாயிலாக பாரத மொழிகளில் இவர்களுக்கு இருக்கும் அறிவையும் திறமையையும் பரிசோதித்தல்; கற்பித்தல்-கற்றல் பொருள்களை மொழிபெயர்த்தல்; மேலும், தேசியக் கல்விக் கொள்கையின் (NEP-2020) தொலைநோக்கின்படி தற்போதைய கல்விச் சூழலிலிருந்து பாரத மொழிகள் சூழலுக்கு எளிய விதத்தில் மாறுவதை உறுதிசெய்தல் ஆகிய பகுதிகள் இதில் கவனம் செலுத்தப்பெறும்.

இந்த இரண்டு நாள் உச்சிமாநாட்டில், பாரத மொழிகளில் கல்வி என்கிற தொலைநோக்கு இலக்கினை அடைவதற்கென கல்வித்துறையைச் சார்ந்த அனைவரும் செயல்படுத்துவதற்கான ஒரு திட்டம் உருவாக்கப்படும். உச்சிமாநாட்டில் ஏறத்தாழ 1000 பேர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் கல்வியாளர்கள், மாணவர்கள், ஆய்வு மாணவர்கள், கல்வித்தொழில்நுட்ப மற்றும் தகவல்தொழில்நுட்பத் துறையினர், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஊடகத்தினர், தன்னுரிமைத் தொழிலர் முதலானோர் அடங்குவர். இந்த மாநாடு மத்தியக் கல்வி அமைச்சகம் (MoE), திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் (MSDE), மற்றும் இவற்றின் உறுப்பு நிறுவனங்களான இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் (CIIL), பல்கலைக்கழக மானியக் குழு (UGC), தேசிய கல்வித் தொழில்நுட்ப மன்றம் (NETF), அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE), தேசிய தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NCVTE), ஆசிரியர் கல்விக்கான தேசிய நிறுவனம் (NCTE), பாரதிய பாஷா சமிதி (BBS) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவரங்கள் அறிய உச்சிமாநாட்டின் இணையதளத்தைப் பார்க்கவும்: https://technology-bharatiyabhasha.aicte-india.org